முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 21.07.2026

O.S No.196/2019

பி.வா.சா.1- காமிலா

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

இந்த வழக்கில் வாதி என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் பாதை கேட்டு போட்டுள்ளார். வழக்கு எ பட்டிகை சொத்தின் சர்வே எண் 25/5 ஆகும். கிராமம் இரவிபுதூர் ஆகும். வாதியின் செண்ட் எவ்வளவு என்றால் 40 செண்ட் ஆகும். வாதி தற்போது அதில் தென்னைமரங்களை வைத்துள்ளார். தென்னைமரங்களுக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 20,25 வயது இருக்கும். வழக்கு பி பட்டிகை சொத்து எனக்கு சொந்தமானது. அந்தசொத்து என் கணவர் எனக்கு செட்டில்மெண்ட் பத்திரமாக 2008 ல் எழுதிகொடுத்தது. வழக்கு பி பட்டிகை சொத்தின் சர்வே எண்.24/1 ஆகும். 2008 ல் என் கணவர் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் 24/1 சர்வே எண் வரும் அதற்கு பின்பு எழுதிய பத்திரத்தில் 24/11 சர்வே எண் உள்ளது. 24/11ம் இரவிபுதூர் கிராமத்தில் உள்ளது. மொத்த பரப்பளவு 2 ஏக்கர் 83 ½ செண்ட் ஆகும். எனக்கு எழுதிகொடுத்தது 2 ஏக்கர் 60 செண்ட் ஆகும்.

என் கணவருக்கு அந்த சொத்து எப்படி கிடைத்தது என்றால் பூர்வீக சொத்தாகும். அவரது பெற்றோர்கள் அவருக்கு 2008 ல் எழுதி கொடுத்தார்கள். அந்த ஆவண எண் எனக்கு ஞாபகமில்லை. அந்த ஆவண எண் 2174/2008 என்றால் ஞாபகமில்லை.என் கணவருக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆண்டிலேயே எனக்குஎன் கணவர் ஏன் எழுதி கொடுத்தார் என்றால் 6 மாதம் கழித்து என் பெயரில் எழுதிகொடுத்தார் அதற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. சும்மாதான் எழுதிகொடுத்தார். என் கணவரின்பெற்றோருக்கு எவ்வாறு சொத்து கிடைத்தது என்று எனக்கு தெரியாது. வழக்கு பி பட்டிகை சொத்தில் இருந்து நான் குடியிருக்கும் வீடு எவ்வளவு தூரத்தில் இருக்கும்

என்றால் துாரம் தெரியாது சுமார் ½ மணிநேரத்தில் சென்று விடலாம்.

நான் வாங்கிய தேதியில் இருந்து பி பட்டிகை சொத்தில் விவசாயம் செய்யவில்லை என்றால் சுமார் 15 வருடம் விவசாயம் செய்தோம். நெடுஞ்சாலைக்கு நிலம் எடுத்த பின்பு விவசாயத்தை நிறுத்தி விட்டோம். நெற்பயிர் விவசாயம் செய்வோம். பி பட்டிகை சொத்தின் வடக்கு பக்கம் பெரிய ரோடு உள்ளது. தெற்கு பக்கம் வாதியின் சொத்தும் மேற்குபக்கம் கேரளாகாரரின் சொத்தும் உள்ளது, கேரளாகாரரின் பெயர் குறிப்பிட்டு சொல்ல தெரியாது. கிழக்கு பக்கம் நாங்கள் 2021 ல் விலைக்கு விற்ற நாகமணியின் 24 சென்ட் சொத்து உள்ளது. பி பட்டிகை சொத்தின் சர்வே எண்ணில்தான் 24 சென்ட் இடத்தை விலைக்கு கொடுத்தோம் என்றால் சரி. நாங்கள் 15 வருடம் நெற்பயிர் விவசாயம் செய்த காலங்களில் விவசாயம் செய்வதற்கு தண்ணீர் எங்கிருந்து வரும் என்றால் வடக்கிருந்து தெற்கு நோக்கி வரும். காலானது எங்கிருந்து ஆரம்பித்து எங்கு செல்கிறது என்றால் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வாதியின் சொத்து வழியாக பின்னால் உள்ள ஓடையில் சென்று சேர்கிறது. அந்த கால்வாயானது சுமார் 7 முதல் 8 அடி அகலம் இருக்கும். தற்போது அந்த கால்வாய் இல்லை என்றால் சரி. அந்த கால்வாயில் எனக்கும் வாதிக்கும் தண்ணீர் செல்லும் என்றால் சரி.

பி பட்டிகை சொத்தில் தென்னைமரங்கள் உள்ளதா என்றால் இல்லை. 24/11 ல் 100 தென்னைமரங்கள் உள்ளது. 24/1 மற்றும் 24/11 சொத்தும் ஒரேகிடப்பாக இருந்தது. நெடுஞ்சாலைக்கு நிலம் எடுத்த பின்பு இரண்டு கண்டமாக பிரிந்து விட்டது. என் கணவர் கொடுத்த 2 ஏக்கர் 60 சென்ட்டில் தற்போது என்கைவசம் எவ்வளவு உள்ளது என்றால் 1 ¼ முதல் 1 ½ ஏக்கர் இருக்கும்.1 ஏக்கர் நெடுஞ்சாலைக்கு 2020 ல் எடுத்து விட்டார்கள். சாட்சி தற்போது 2018 என்று மாற்றி சொல்கிறார். அதற்கு நஷ்டஈடாக 12 லட்சம் ரூபாய் கொடுத்தார்கள். 2021 ல் நான் விலைக்கு கொடுத்தபோது எவ்வளவு கிரயதொகை

வாங்கினேன் என்றால் 5 லட்சத்து 65 ஆயிரம். வாதியின் இடத்திற்கு என் நிலத்தின் வழியாக சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல கேரளாகாரரின் வழியாக சென்று வருகிறார்கள். 7,8 அடி அகலம் உள்ள காலை மூடிவிட்டதால் அதன் வழியாக வாதி சென்றுவருகிறார் என்றால் சரியல்ல அதனை நெடுஞ்சாலை துறையினர் எடுத்து விட்டார்கள்.

நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கின் விவரங்களை வழக்கறிஞருக்கு நான் சொன்னேன். எங்கள் நிலத்தில் வரப்பும் கால்வாயும் இல்லை. பி பட்டிகை சொத்தின் வடக்கே வரப்பு உள்ளதா என்றால் இல்லை. ரோட்டை ஒட்டி 4 அடியில் வரப்பு உள்ளதா என்றால் இல்லை.மேற்கு, கிழக்கு, தெற்கு பக்கம் வரப்பு உள்ளதா என்றால் தெற்கு பக்கம் வரப்பு உள்ளது மற்ற பக்கம் வரப்பு இல்லை. நான் விவசாய நிலத்தை மனையாக பிரித்து விற்பனை செய்யும் நபர் என்றாலும் அதனால் வரப்புகளை அழித்துள்ளேன் என்றாலும் வாதியின் இடத்திற்கு செல்லும் வழியை இடஞ்சல் செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.

வாதி என் சொத்தை அபகரித்ததாக சொல்லியிருப்பதில் அது எந்த ஆண்டு என்றால் 2019 ஆகும். எவ்வளவு பரப்பளவை வாதி அபகரித்தார் என்றால் தெரியாது. 6 அடி அகலம் நீளம் சுமார் 15 அடி இருக்கும். அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார்மனு கொடுத்தோம். அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ 7 13.4.2021 ம் தேதி புகாரில் நான் சொன்ன ஆக்கிரமிப்பை சொல்யியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. உண்மையில் வாதி என் இடத்தை அபகரிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். முதன்முதலாக தற்போதுதான் மேற்படி விவரத்தை நான் கூறுகிறேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. உண்மையில் வாதி அபகரிக்கவில்லை என்றாலும் வாதியின் வழிபாதையை நான் இடஞ்சல் செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.

பி பட்டிகை சொத்தில் 2,3 லாரி கருங்கல்லை போட்டுள்ளேன் என்றால் சரி. பி.வா.சா.ஆ.4 ல் உள்ள கருங்கல்லை நான் தான் போட்டேன் என்றாலும் அதில் எந்த கட்டிடமும் இல்லை என்றாலும் சரி. வாதியின் பாதையை மறிக்க அதை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ல் 3 வது புகைப்படத்தில் வாதியின் இடத்திற்கு செல்லகூடிய கேட் உள்ளது என்றால் சரி. அந்த கற்களை எதற்காக போட்டுள்ளேன் என்றால் காம்பவுண்ட் கட்டுவதற்காக 2019 ல் போட்டேன். காம்பவுண்ட் கட்டவிடாமல் வாதி பிரச்சனை செய்ததாக புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. 2019 ல் வாதி பிரச்சனை செய்தார். பி.வா.சா.ஆ.4 புகைப்படம் நான் சாட்சியம் அளிக்கும் போது எடுத்த புகைப்படம் என்றால் சரி. உண்மையில் கருங்கற்களை தற்போது தான் நான் போட்டேன் என்றாலும் வழக்கிற்காக 2019 ல் போட்டேன் என்றாலும் சரியல்ல.

வாதியின் சொத்திற்கு கிழக்கு பக்கம் வேறுஒருநபரின் இடம் உள்ளது அவரது பெயர் தெரியாது. வாதியின் சொத்திற்கு தெற்கு பக்கம் யார் சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது. வாதியின் சொத்திற்கு மேற்கு பக்கம் யார் சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது. தென்னந்தோப்பு உள்ளது. வாதியின் இடத்திற்கு என்னுடைய சொத்தை தவிர வேறு வழி இல்லை என்றால் சரியல்ல. கேரளாகாரரின் இடம் வழியாக சென்று வருகிறார். வாதியின் சொத்தின் கிழக்கே புறம்போக்கு நிலம் உள்ளது அதன் வழியாக செல்லலாம் கிழக்கே உள்ளஓடை வழியாக செல்லலாம். நெடுஞ்சாலை வழியாகவும் செல்லலாம். நான்கு பக்கம் பாதை இருந்தும் நாங்கள் முஸ்லீம் என்பதால் எங்களை தொந்தரவு செய்து வருகிறார். வாதியின் சொத்திற்கு 4 பக்கமும் பாதை இருப்பதை எனது எதிர்வழக்குரையிலோ நிருபணவாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரி.

வாதியின் எ பட்டிகை சொத்திற்கு டெம்போ செல்வதற்கு ஓலை வைத்து அடைத்திருப்பதாக நான் சொல்கிறேன் என்றால் சரி. வாதியின் சொத்தில் விவசாய

பொருட்கள் எடுப்பதற்கும் கொடுப்பதற்கும் டெம்போ, லாரி போன்ற வாகனங்கள் சென்று வரும் என்றால் சரி. சிறிய வாகனங்கள் போய்வரும். அந்த வாகனங்கள் வாதியின் சொத்தின் மேற்கு பக்கம் வழியாக செல்லமுடியாது என்றால் சரி. வாதி சொத்தின் கிழக்கு, தெற்கு பக்கம் வழியாக அந்த வாகனங்கள் செல்லமுடியாது என்றால் சரி. வாதியின் எ பட்டிகை சொத்திற்கு என் சொத்தின் வழியாக மட்டுமே சென்று வரமுடியும் என்றால் சரியல்ல. கேரளாகாரரின் வழியாக செல்லமுடியும். கேரளாகாரரின் சொத்தின் வழியாக வாதியின் டெம்போ,டிராக்டர் சென்று வருவதாக எனது எதிர்வழக்குரையிலோ நிருபணவாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

உண்மையில் எனது நிருபணவாக்குமூலத்தில் மேற்படி விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4, 8 வது புகைப்படத்தில் நான் விலைக்கு கொடுத்த இடத்தில் காம்பவுண்ட் சுவர் எழுப்பி ஒரு அறை கட்டியுள்ளார்கள் என்றால் சரி. அது எப்போது கட்டினார்கள் என்றால் எனக்கு தெரியாது. காம்பவுண்ட்சுவர் கட்டும்போது அஸ்திபாரம் போட்டபோது நான் பார்க்க சென்றேனா என்று எனக்கு தெரியாது. உண்மையில் வழக்கு பி பட்டிகை சொத்திற்கு நான் செல்வதே இல்லை என்றால் சரியல்ல. எ பட்டிகை சொத்திற்கு வழிபாதையை மறைத்தால் அவரது சொத்தை குறைந்த விலைக்கு விலைக்கு வாங்கலாம் என்ற கெட்ட எண்ணத்தில் செயல்படுகிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு பி பட்டிகை சொத்தில் வாதிகள் கம்பிவேலிகள் அமைத்து கேட் போட்டதாக சொல்லியிருப்பதில் எந்த வருடம் என்றால் ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.5 வில்லங்க சான்றிதழ் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாதிகளுக்கு பாதை அவகாசம் இல்லை என்பதை காட்ட தாக்கல் செய்துள்ளேன்.நான் விலைக்கு கொடுத்த 24 சென்ட்டை நாகமணிக்கு விலைக்கு கொடுத்தேன். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் ரவிகணேசுக்கு விலைக்கு கொடுத்ததாக உள்ளது என்றால் நான் நாகமணிக்கு

கொடுத்தேன் அவர் அவரது மகன் பெயரில் எழுதி விட்டார். நாகமணிக்கு விலைக்கு கொடுத்த ஆண்டு தற்போது ஞாபகமில்லை. நாகமணிக்கு விலைக்கு கொடுத்த விவரம் பி.வா.சா.ஆ.5 ல் துலங்கவில்லை என்றால் சரி. வாதிக்கு பாதை அவகாசம் கொடுக்ககூடாது என்பதற்காக முரணான ஆவணங்களை தாக்கல் செய்த பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ரவிகணேசுக்கு விலைக்கு கொடுத்த போது வாதி எனக்கு எந்த தொந்தரவும் செய்யவில்லை என்றால் சரி. ரவிகணேஷ் காம்பவுண்ட் சுவர் எழுப்பி அறை கட்டியபோதும் வாதி எந்த தொந்தரவும் செய்யவில்லை என்றால் சரி. 1999 ல் இருந்தே வாதி அனுபவித்து வந்த வாதியின் ஒரே வழி பாதையை நான் முள்செடி போட்டு அடைத்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் என்னை துன்புறுத்தும் நோக்கம் இல்லை என்றாலும் சரியல்ல. வாதியின் எ பட்டிகை சொத்து எந்த வருடம் எப்படி கிடைத்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி தாக்கல் செய்த பிராதை நான் படித்து பார்த்தேனா என்றால் எனக்கு கொடுக்கவில்லை. 1999 உயில் படி எ பட்டிகை சொத்து வாதிக்கு கிடைத்ததாக சொல்லியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் இருந்து பிராது எனக்கு சார்பாகவில்லை என்றால் சரி. எதன் அடிப்படையில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் வீடு மாறும்போது தவறி விட்டது இருப்பதை வைத்து நாங்கள் தாக்கல் செய்தோம்.

முதலில் பறக்கைரோட்டிலும் அடுத்து 2020 ல் ஆசாத்நகர் வெள்ளடிச்சிவிளையிலும் அதன்பின் இடலாகுடி சந்து தெருவிலும் இருந்தோம். 2019 ல் பறக்கைரோட்டில் இருந்தோம். பிராதில் கொடுக்பட்ட முகவரி என்னுடைய முகவரி என்றால் சரி. என்னுடைய சொத்தில் கிழமேலாக 3 டெம்போ கருங்கற்களை போட்டுள்ளேன் என்றால் சரி. அதற்கு வடக்கு பக்கம் பெரிய தார் ரோடு செல்கிறது. கருங்கற்களுக்கு தெற்கு பக்கம் வாதியின் சொத்து உள்ளது என்றால் சரி. பிரதியின் செலவு தொகையுடன் வாதியின் வழக்கு

அனுமதிக்கதக்கது என்றால் சரியல்ல.